வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,

ந.க.எண்.4803/ அ2/2022 நாள் : .01.2023

| | |
|---|---|
| பொருள் | தமிழ்நாடு மேல்நிலைக் கல்வி கல்விப்பணி - 2022 - 2023 - ஆம் கல்வியாண்டில் அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் காலியாகவுள்ள முதுகலை ஆசிரியர்கள் / பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடங்கள் தற்காலிகமாக தொகுப்பூதிய அடிப்படையில் பள்ளி மேலாண்மைக்குழு மூலம் தகுதியுள்ள ஆசிரியர்களைக் கொண்டு நியமனம் செய்தமை - பணியாற்றி வரும் தொகுப்பூதிய ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை பெறப்பட்டது - 01.01.2023 முதல் 28.02.2023 வரை நிதி ஒதுக்கீடு பகிர்ந்தளித்தல் சார்ந்த தலைமை ஆசிரியர்களுக்கு நிதி அதிகாரம் வழங்கி ஆணையிடுதல் - சார்பு |
| பார்வை | 1. அரசாணை நிலை எண்.(7)பள்ளிக் கல்வி பக(5)த்துறை நாள்.07.01.2023<br>2. சென்னை தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.34087/சி2/யு2/2022 நாள்.09.01.2023<br>3. சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள் |

-----

பார்வையில் காணும் செயல்முறைகள் மற்றும் அரசாணைக்கிணங்க 2022-2023 ஆம் ஆண்டுகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதியும் 10,11 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணாக்கார்களை பொதுத் தேர்வுகளுக்கு தயார் செய்வதற்கு ஏதுவாகவும் அரசுப் பள்ளிகளின் தேர்ச்சி சதவீதம் கருதியும், பள்ளி மேலாண்மைக்குழு மூலம் தற்காலிக அடிப்படையில் தகுதி வாய்ந்த நபர்களைக் கொண்டு காலிப்பணியிடங்களை நிரப்பிட ஆணையிடப்பட்டது.

அதனடிப்படையில் வேலூர் மாவட்டத்திலுள்ள தற்காலிக பட்டதாரி ஆசிரியர் காலிப்பணியிடங்களில் 175 பட்டதாரி ஆசிரிகர்களும், 52 முதுகலை ஆசிரியர்களும் காலிப்பணியிடங்களுக்கு பள்ளி மேலாண்மைக்குழு மூலம் தற்காலிக நியமனம் செய்ய அனுமதிக்கப்பட்டது. அதனடிப்படையில் வேலூர் மாவட்டத்திலுள்ள பள்ளிகளில் பட்டதாரி / முதுகலை ஆசிரியர் காலிப்பணியிடங்களில் இணைப்பில் கண்டவாறு தற்காலிக அடிப்படையில் பள்ளி மேலாண்மைக் குழு மூலம் நிரப்பப்பட்டது.

**அதன்படி நியமனம் செய்யப்பட்ட நபர்களுக்கு அவரவர் நியமனம் செய்யப்பட்ட தேதியின் அடிப்படையில் அதாவது 01.01.2023 முதல் 28.02.2023 வரை பணிபுரிந்த**

ப..ரா.,

**நாட்களுக்கான மாதங்களுக்கான ஊதியம் நேரிடையாக சம்பந்தப்பட்ட தற்காலிக ஆசிரியரின் வங்கி கணக்குகளுக்கு E.C.S. முறையில் ஊதியம் பெற்று வழங்க வேண்டும்.**

மேலும் பார்வையில் காணும் அரசாணையில் தெரிவித்துள்ளபடி கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பட்டியல் தயாரித்து உரிய கருவூல அலுவலகத்தில் சார்ந்த நபர்களுக்கு ஊதியம் பெற்று வழங்கும் அதிகாரம் சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்களுக்கு வழங்கப்படுகிறது எனவும் அந்நபர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்திற்கான பற்றுச் சீட்டு பள்ளித் தலைமையாசிரியர்களால் பராமரிக்கப்பட வேண்டும்.

**மேலும் ஜனவரி 2023 மாத ஊதியத்திற்கான நிதிஒதுக்கீடு செய்ய ஏதுவாக ஏற்கனவே அனுப்பப்பட்ட படிவத்தில் விவரங்களை பூர்த்தி செய்து வருகைப்பதிவேட்டு மூன்று நகலுடன் இவ்வலுவலகத்தில் 05.02.2023 அன்று மாலை 04.00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.**

**பிப்ரவரி 2023 மாத ஊதியத்திற்கான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ள விவரங்களை 05.03.2023 மாலை 04.00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.**

**மேற்கண்டவாறு பள்ளி மேலாண்மைக்குழு மூலம் பணியிடங்கள் நிரப்பப்பட்ட விவரங்கள் மற்றும் ஜனவரி 2023 வரை செலவிடப்பட்ட தொகை, ஊதியம் பெற்று வழங்கப்பட்ட E.C.S. தகவல் அறிக்கை மற்றும் மீதமுள்ள தொகை விவரத்தினை இவ்வலுவலக ( அ3 பட்டதாரி ஆசிரியர் ) மற்றும் (அ4 பிரிவில் முதுகலை ஆசிரியர் ) தனித்தனியாக 28.2.2023 அன்று மாலை 04.00 மணிக்குள் நேரில் ஒப்படைக்குமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

இத்தொகையின் கீழ்கண்ட தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

2202 - பொதுக் கல்வி - 02 இடைநிலைக் கல்வி
109 அரசு இடைநிலைப் பள்ளிகள் - மாநில செலவினங்கள் -
AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்
மற்றும் பணியாளர்களின் சம்பளம் - 333 தொழில்முறை சிறப்பு
பணிகளுக்கு தொகை கொடுத்தல் - 04 - ஒப்பந்த ஊதியம்
த.தொ.கு.2202-02 -109 - AA -333-04)

**குறிப்பு.**

**இதில் எவரேனும் 01.04.2023 க்குப் பின் மேற்குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்ட தொகையினை செலவு செய்யாமல் சேமிப்பில் வைத்திருந்தால் சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் மீது தமிழ்நாடு குடிமைப்பணிகள் விதிகளின்கீழ் கண்டிப்பாக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், மேலும்**

**பிற்காலத்தில் ஏற்படும் மாநில கணக்காயரின் தணிக்கைத் தடைகளுக்கு சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர்களே பொறுப்பாவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.**

இணைப்பு.

பள்ளிகளின் பட்டியல் மற்றும் செலவின அறிக்கை(மாதிரி படிவம்)

முதன்மைக் கல்வி அலுவலர்,

வேலூர்.9.

பெறுநர்

1. பட்டியலுள்ள அரசு / நகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள்

2. மாவட்டக் கருவூல அலுவலர் மற்றும் உதவிக் கருவூல அலுவலர்கள்

வேலூர் மாவட்டம்.

3.இவ்வலுவலக அ2 பிரிவிற்கு IFHRMS மூலம் பள்ளிகளுக்கு நிதிஒதுக்கீடு பகிர்ந்தளிக்கும் பொருட்டு அனுப்பப்படுகிறது.

நகல்.

மாவட்டக் கல்வி அலுவலர்,

(இடைநிலைக் கல்வி) வேலூர். (தொடர் நடவடிக்கையின் பொருட்டு)

ப..ரா.,

## முதுகலை ஆசிரியர் / பட்டதாரி ஆசிரியர்கள் தனித்தனி படிவம் சமர்பிக்க வேண்டும்

# பற்றுச் சீட்டு

**2022 - 2023 ஆம் கல்வி ஆண்டில் பள்ளி மேலாண்மைக் கழு மூலம் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி / முதுகலை ஆசிரியர்களுக்கு 31.01.2023 மாதம் ஊதியம் பெற்று வழங்கப்பட்ட விவரம் பணிந்தனுப்பப்படுகிறது.**

| வ எண். | பெயர் மற்றும் பதவி | பாடம் | பணிபுரிந்த நாட்கள் | பணிபுரிந்த மாதங்கள் | தொகை | கையொப்பம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |

**தலைமையாசிரியர் கையொப்பம்**

**அலுவலக முத்திரையுடன்**

ப..ரா.,